## கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுலை 20 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 செப்டம்பர் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------

மீளாய்வாண்டிக்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகளை தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கருதுகோள்கள் பற்றிய குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 130,000 பெறுமதியான 03 காணிகளின் பெறுமதியை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) கிரிந்த புஹுல்வெல்ல கிராம சபை அலுவலகம் அமைந்திருந்த ரூபா 45,000 பெறுமதியான பழைய கட்டிடத்தை 2013 ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும அவ் ஆதனங்களை குறிப்பிட்ட சொத்துக்கள் கணக்கில் இருந்து அகற்றியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யும் போது கோரியிருந்த கூறுவிலை அடிப்படையாகக் கொண்டு பதிவு செய்திருந்தமையால் தளபாடங்கள் மற்றும்

உபகரணங்களின் பெறுமதி ரூபா 19,091 இனால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் 2014 செப்டம்பர் 10 திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 3,900 இற்கான ஸப் வூபர் இயந்திரத்தின் பெறுமதி ரூபா 39,000 தொகை என கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 35,100 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன் அதே தினத்தில் கொள்வனவு செய்திருந்த ரூபா 11,250 தொகை பெறுமதியான புரஜெக்டர் ஸ்கிரின் இயந்திரத்தின் பெறுமதி பொறியும் பொறித் தொகுதிக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையினால் 2014 அக்டோபர் 26 திகதி தனியார் நிறுவனமொன்றில் இருந்து கொள்வனவு செய்திருந்த 5 அலுவலக மேசைகளின் பெறுமதி ஆகிய ரூபா 71,640 தொகையினை இரண்டு முறை பதிவு செய்திருந்தமையால் தளபாடங்கள் பொருத்துக்களின் பெறுமதி அப் பெறுமதியால் இரட்டிப்பாக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 20 திகதி உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த இலக்கம் LL-6918 கொண்ட டிரம் டிரக் வண்டியின் பெறுமதியினை மதிப்பீடு செய்து மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டியின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. மேலும் சபையின் மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டி இன் கீழ் காட்டியிருந்த ரூபா 265,000 பெறுமதியான பெரிய டிரக்டர் மற்றும் டிரய்லர் பௌதீக ரீதியாக காணக் கூடியதாக இருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரை கையிருப்பின் பெறுமதி ரூபா 6,262 தொகை எனினும், அவை நிதிக் கூற்றுக்களில் கையிருப்பின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 சபை அலுவலர்களின் ரூபா 23,262 இற்கான ஊழியர் பிணை வைப்புக்களின் கீழ் மற்றும் ஊழியர் பிணை முதலீடுகளின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது பில்போடப்பட்ட கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக வரிகளின் பெறுமதி ரூபா 412,440 தொகையினை வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யாமல், அப் பெறுமதியில் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 8,480 தொகையினை கழித்து மீதியினை கடன்பட்டோரின் கீழ் பெற வேண்டிய தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான சபையின் வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 26,550 பெறுமதியின் மீதிகள் காணப்பட்ட போதும் அம் மீதிகள் நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 10 நடமாடும் சிறு கடைகள் நன்கொடையொன்றாக கிடைத்திருந்ததுடன் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

10 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 6,932,801 காணப்பட்டதுடன் துணைப் பதிவேட்டின் பிரகாரம் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 7,236,123 ஆக காணப்பட்டமையால் ரூபா 303,322 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 305,955 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 33,421,267 ஆகும்.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 577,478 பெறுமதியான 04 கணக்கு மீதிகள் தீர்க்கப்படாமல் 2006 ஆண்டு முதல் முன் கொண்டுவரப்பட்டு காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 73,659,491 பெறுமதியான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு அறிக்கை, சொத்துக்கள் கணிப்பீட்டு அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) விதி 217,218 | சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் வதிவதற்கு எடுக்கப்படும் அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 திகதி இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 412,336 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 751,256 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

--------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 697 | 1,309 | 661 |
| வாடகை | 905 | 1,688 | 119 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 247 | 151 | 209 |
| ஏனைய வருமானங்கள் | 4,755 | 5,540 | 1,757 |

2.2.2 வீத வரி

-----------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட வீத வரி பெறுமதி ரூபா 576,131 ஆக காணப்பட்டதுடன் அத் தொகையில் அறவீடுகள் ரூபா 162,065 ஆகும். அதன் பிரகாரம் நிலுவைத் தொகையில் அறவீடுகள் சதவீதம் நூற்றிற்கு 28 ஆகும். மீளாய்வாண்டிற்கான பில்போடப்பட்டவைகள் ரூபா 425,989 ஆக காணப்பட்டதுடன் பில்போடப்பட்டவைகளில் அறவீடுகள் ரூபா 168,825 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பில்போடப்பட்டவைகளில் பெறுவனவுகள் சதவீதம் நூற்றிற்கு 40 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | மிகை |
|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | - |
| இரண்டாம் தரம் | 20 | 24 | 04 |
| ஆரம்ப தரம் | 20 | 23 | 03 |
| (அமைய, தற்காலிக,ஒப்பந்த) | - | 09 | 09 |
| | 41 | 57 | 16 |

திறைசேரி செயலாளரின் மற்றும் நிதி அமைச்சு செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய இலக்கம் 14 கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 28 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அறிவித்திருந்த போதும் பிரதேச சபையினால் 2014 ஆண்டில் 9 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 1,820,659 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக கணிசமான அறவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீட்டு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்